Registered as a News Paper பக்கங்கள் 04 விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்களின் தினசரி

நாதம்: 02 திருவள்ளுவர் ஆண்டு 2022 மார்கழி 09 (24-12-1991) செவ்வாய்க்கிழமை ஓசை: 309

## பரு.துறை ஆஸ்பத்திரியில் மருந்துத் தட்டுப்பாடு

பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையில் மருந்து வகைகளுக்குப் பலத்த தட்டுப்பாடுகள் ஏற்பட்டுள்ளன. இதனால் இவ் வைத்தியசாலைக்குச் சிகிச்சைக்காகச் செல்லும் நோயாளிகள் பலத்த ஏமாற்றமடையவேண்டிய அவலநிலை தோன்றியுள்ளது. இப்பகுதியில் மருந்துகள் இல்லாமையினால் பல உயிர்கள் அநியாயமாகப் பலியாகுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. எனவே இப்பகுதி மக்கள் இவ்வைத்தியசாலைக்குத் தேவையான மருந்துகளை வழங்க ஆவன செய்யுமாறு கோரியுள்ளனர். (25)

# யாழ். குடாநாடு மீது படையெடுத்தால் சமாதான பேச்சுக்கள் முறியும்

## அரசின் இராணுவ அணுகுமுறை ஆபத்தானது; விடுதலைப் புலிகள் நிலை குறித்து விளக்கம்

(யாழ்ப்பாணம்)

"சிறிலங்கா ஆயுதப் படைகள் யாழ்ப்பாணக் குடாநாடு மீது பெரும் படையெடுப்பை நிகழ்த்தினால் அது சமாதானப் பேச்சுவார்த்தைகளைக் குழிதோண்டிப் புதைப்பதாகவே முடியும். இதனால் எழக்கூடிய பாரதூரமான விளைவுகளுக்கு சிங்கள அரசுதான் பொறுப்பேற்கவேண்டும்," இவ்வாறு விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அதிகாரபூர்வமான பேச்சாளர் ஈழநாதத்திற்குத் தெரிவித்தார்.

"தமிழ் மண்மீதான ஆக்கிரமிப்பு யுத்தத்தை மேலும் தீவிரப்படுத்தி, தமிழ் மக்களை மேலும் நெருக்குதலுக்கு ஆளாக்கி, மறுபுறம் உத்தியோகப்பற்றற்ற பேச்சுக்களை நடத்தலாம் என அரசு திட்டமிடுகிறது. இந்த அணுகுமுறை மிகவும் தவறானது மட்டுமன்றி ஆபத்தானதுமாகும். இராணுவ அழுத்த நிலையில் அல்லது இராணுவ மேலாதிக்க நிலையில் விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தைக்கு உடன்பட்டு பணிந்து வருவார்கள் என எண்ணுவது விவேகமற்ற செயலாகும்" என இப்பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

"சமரசப் பேச்சுக்களுக்கு முன்னோடியாக ஒருசமாதான நல்லெண்ணச் சூழ்நிலை உருவாக்கப்படுவதன் அவசியத்தை நாம் வலியுறுத்திவந்தோம். இராணுவ அழுத்தங்களும், பொருளாதார நெருக்குதல்களும் நீங்கிய ஒரு சுமுகமான சூழ்நிலையில் பேச்சுவார்த்தைகளை நடாத்துவதே சாலச் சிறந்தது என அமைச்சர் தொண்டமான் வாயிலாக அரசுக்குத் தெரிவித்திருந்தோம். ஆயினும் சிறிலங்கா அரசு இதற்குச் செவிசாய்ப்பதாகத் தெரியவில்லை. சமாதானச் சூழ்நிலையை உருவாக்க அரசு விரும்பவில்லை. போரைத் தொடர்ந்து நடாத்தி தமிழரின் தாயகத்தை தனது ஆதிக்கத்தின்கீழ் கொண்டுவரவேண்டும் என்பதில் தான் பிரேமதாசா அரசு அக்கறை காட்டு

(3 ஆம் பக்கம் பார்க்க)

## தபால்கள் வந்தன

யாழ். மாவட்டத்துக் கடிதங்கள் நேற்றிரவு யாழ். பிரதம தபால் கந்தோருக்கு வந்து சேர்ந்தன இவற்றுடன் முத்திரைகளும் வந்ததாக தெரிவிக்கப்பட்டது.

(4ஆம் பக்கம் பார்க்க)

## சுயேச்சை எம். பிக்கள் பதவி 27 இல் காலாவதியாகும்

இந்த மாதம் 27 ஆம் திகதிக்கு முன்னர் யாழ். மாவட்ட சுயேச்சை எம். பி. க்கள் பதவியேற்காவிடின் இவர்களின் நியமனம் காலாவதியாகிவிடும் என்ற கொழும்புப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

அத்துடன் இவர்கள் இன்னமும் பாராளுமன்றத்திற்கு சென்று சத்தியப்பிரமாணம் செய்து பதவியேற்கவில்லை என்றும் அப் பத்திரிகைகள் குறிப்பிட்டுள்ளன.

## ஜே. ஓ. சி. குண்டுவெடிப்பு

## தகவல் தரத் தவறியவர் பிணையில் செல்ல அனுமதி

(கொழும்பு)

கூட்டுப்படைத் தலைமையகத்தின் மீது குண்டுத்தாக்குதலை நடாத்துவதற்கு முன்பு அந்த விடயம் குறித்து தெரிந்திருந்தும் பொலிசாருக்குத் தகவல் தராத வெள்ளைத்துரை சினி வீடியோ உரிமையாளர் பயங்கரவாதத்தடைச் சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்பட்டார். இவர் பின்னர் 50,000 ரூபா பிணையில் விடுசெல்ல அனுமதிக்கப்பட்டார்.

(4ஆம் பக்கம் பார்க்க)

## சூழலைப் பாதுகாக்க மாணவருக்கு அமைப்பு

முன்னோடியாக ஒருசமாதான நல்லெண்ணச் சூழ்நிலை உரு வாக்கப்படுவதன் அவசியத்தை நாம் வலியுறுத்தியிருந்தோம். இராணுவ அழுத்தங்களும்,

களும் நீங்கிய ஒரு சமுகமான சூழ்நிலையில் பேச்சுவார்த்தை களை நடாத்துவதே சாலச் சிறந்தது என அமைச்சர் தொண்டமான் வாயிலாக அர

அதனும் சிறிலங்கா அரசு இதற்கு செவிசாய்ப்பதாகத் தெரிய வில்லை. சமாதான சூழ் நிலையை உருவாக்க அரசு விரும்பவில்லை. போரைத்

கத்தின்கீழ் கொண்டுவரவேண் டும் என்பதில் தான் பிரே தாசா அரசு அக்கறை காட்டு (3 ஆம் பக்கம் பார்க்க)

# அமைச்சரவையில் அங்கம் வகிக்க

# தொண்டா அருகதையற்றவர்

"வடக்கு கிழக்கு மாகாண ங்களை ஒருபொழுதும் ஒன் றிணைப்பதில்லை என ஐக் கிய தேசியக் கட்சி தனது

## பௌத்த அமைப்புக்கள் கண்டனம்

தேர்தல் விஞ்ஞாபனத்தில் பிர கடனப்படுத்தியிருந்தது. ஆனால் ஐ.தே. கட்சியின் அமைச்சரான திரு. தொண்ட மான் வடக்குக் கிழக்கை இணைத்த தமிழர் மாநிலம் ஒன்று அமைக்கப்பட வேண்டு

மென தனது தீர்வுத் திட்டத் தில் சிபார்சு செய்திருக்கிறார். இப்படியாக அரசாங்கத்தின் அடிப்படைக் கொள்கைக்கு முற்றும் முரணாக செயற்பட விளையும் திரு. தொண்டமான் அமைச்சர் அவையில் அங்கம்

வகிக்க அருகதையுள்ளவரா என்று சிங்கள மக்கள் கேட் கின்றார்கள்."

(3 ஆம் பக்கம் பார்க்க)

## மேஜர் மணி வீரச்சாவு



மேஜர் மணி கடந்த 21 ஆம் திகதி திருக்கோணமலை மாவட்டத்தில் தோப்பூர் பட்டிபடி என்னுமிடத்தில் இலங்கை இராணுவத்தினரு

(3 ஆம் பக்கம் பார்க்க)

## விஸ்தரிப்பு நடவடிக்கை வவுனியாவில் ஆரம்பமாம்

(கொழும்பு)

வவுனியாவிற்கு வடக்கே இராணுவக் கட்டுப்பாட்டுள் ளவை மேலும் விஸ்தரிக்க இராணுவ நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளனவென்று வவு னியாவில் சிறிலங்கா இராணு வத்தினர் ஒலிபெருக்கி மூலம் அறிவித்துள்ளனர்.

தாண்டிக்குளத்திற்கு அப் பால் உத்தியோகப்பற்றற்ற ஊரடங்குச் சட்டம் பிறப்பிக் கப்படுவதாகவும், நான்கு நாட்களுக்கு அப்பகுதிக்கு மக் கள் செல்லமுடியாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வவுனியா கிராமங்கள் மீது எறிகணைத் தாக்குதல்

(வவுனியா)

வவுனியாவில் தமிழ்மக்கள் மீது சிறிலங்கா இராணுவத்தினரது தாக்குதல்கள் தொடர்கின் றன.

நேற்றுமுன்தினம் சிறிலங்கா இராணுவத்தினர் புது வீதி

என்ற இடத்தில் இருந்து குழு மாட்டுச்சந்தி கோழியாப் பண்ணை, வழியாகச் சென்று குருமன்காடு என்ற இடத்தில் புதிய காவல் அரண்களை அமைத்துள்ளனர். அத்துடன்

(3 ஆம் பக்கம் பார்க்க)

## சூழலைப் பாதுகாக்க மாணவருக்கு அழைப்பு

சூழல், சுகாதார வார நட வடிக்கைகளை மேற்கொள்ளு முகமாக தனியார் பாடசாலை, தேசியப் பாடசாலை, யாழ். நகர், யாழ். வடநகர், நல்லூர்,

வண்ணார்பண்ணை தெற்குக் கோட்டப் பாடசாலை களின் அதிபர்களும், சுகாதா ரக் குழுக்களின் அங்கத்தவர்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வட்டார ரீதியாகத் துப்புரவு வேலைகள்

யாழ்மாநகர சபையின் இரு பத்திமூன்று வட்டாரங்களில் பொதுச் சுகாதார பரிசோத கர்கள் தலைமையில் சூழல் சுகாதார வேலைகள் நடை பெற்று வருகின்றன.

இச்சுகாதார வாரத்தில் வட்டார ரீதியாக உள்ள வீடு கள், வளவுகள் வீதிகளை அண் டிய வீதியோரங்கள் துப்புரவு செய்யப்பட்டு வருகின்றன. இப் பணியில் வட்டாரச் சுகாதார குழுவுடன் இணைந்து அந்தந்த

(4 ஆம் பக்கம் பார்க்க)

## சூழல், சுகாதார வாரம் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினரால் பிரகடனப் படுத்தப்பட்ட சூழல் சுகாதார வாரம் நேற்றுக்காலை 8 மணி க்கு யாழ் பண்ணைப் பகுதி யில் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து முத லிகட்டமாக யாழ். மாநகரப்பகு தியின் சகல பகுதிகளிலும் தெரிவு செய்யப்பட்ட சுகா தாரம் வேலைக் குழுக்களுடன் பொதுமக்களும், பொது அமை ப்புகளும் இணைந்து மிகவும் உற்சாகமாக துப்புரவு செய் யும் பணியில் ஈடுபட்டதை அவதானிக்க முடிந்தது.

இன்று யாழ்நகரப் பகுதி

(4 ஆம் பக்கம் பார்க்க)

சூழல், சுகாதார சீர்கேடு

## அநியாய உயிரிழப்புக்கள்; தடுப்பதற்கு அணிதிரளுங்கள்

—இளம்பரிதி

சுகாதாரச்சீர்கேட்டால் ஏற் படும் அநியாய உயிர் இழப் புக்களைத் தவிர்த்து எம் மக் களின் உடல் நலத்தைக் காக்க அனைத்துத் தமிழீழ மக்களையும் அணிதிரண்டு வருமாறு யாழ். மாவட்ட அர சியல் நிர்வாகப் பொறுப்பாளர் இளம்பரிதி அழைப்பு விடுத் தார்.

சூழல், சுகாதார வாரம் தொடர்பாக மேற்கொள்ளப்

(3 ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### ஆண்டு 8 ஆண்டு - 11

கணித ஆசிரிய ஆலோசகர், பட்டதாரி, பயிற்றப்பட்ட யாழ் நகரின் பிரபல கல்லூரி ஆசிரியர்களால் கணிதம், விஞ்ஞானம், சமூகக்கல்வி வகுப்புக்கள் ஆரம்பம் 1992-01-01, இடம் 42/6, யாழ் இந்துக் கல்லூரி ஒழுங்கை, ம. ராஜேந்திரன் ஆசிரியர் சாதாரண பரீட்சை; குறுப்பொன்றில் 32 மாணவர்கள். தேர்ச்சி அறிக்கையுடன் வரவும். (R/2019)

### தவறிவிட்டது

ராமகிருஷ்ணன் வசந்தனின் அடையாள அட்டையும் (710361142 V) உரும்பராய் மேற்கு உரும்பராய் U.N.H.C.R மாணவ அடையாள அட்டையும் மானிப்பாய்க்கும் உரும்பராய்க்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து மேல் குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைக்கவும். (R/2027)

ஜீவரெட்ணம் விஜயகுமாரின் முக்கிய ஆவணங்களும் ரூ 4000/- தொகைப் பணமும் யாழ். நகரைக் கழகத்திற்கும் இணுவிலுக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (R/2032)

### விற்பனைக்கு

உசியாடை மானிப்பாய் டைக்கிலுள்ள 4 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு வாங்குபவர் நேரில் சந்திக்கவும். தொடர்பு மு. சிறிஸ்கந்தராசா [R/2033]

### வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்க மணிவிழா

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கம் தனது மணிவிழாவினை வரும் 27 ஆம், 28 ஆம், 29 ஆம் திகதிகளில் வட்டு. திருஞானசம்பந்த வித்தியாசாலை ஆரம்பப்பிரிவு மண்டபத்தில் நடாத்தவுள்ளது.

இந்த நிகழ்ச்சிகளில் மங்கள இசை, ஆசியுரை, கவியரங்கம், வடடிவண்டபம், நடனம்

## ஆசிரியர் தேவை

அரசியல்விஞ்ஞானம் கற்பிப்பதற்குப் போதனாசிரியர் தேவை

தகுதி:- பட்டதாரி ஆசிரியர் அல்லது க. பொ. த. உயர்தரத்தில் அரசியலை ஒரு பாடமாகக் கற்றிருக்க வேண்டும்

தகுந்த சம்பளம் வழங்கப்படும்

விணணப்பிக்க வேண்டிய முகவரி:-

தலைமைச் செயலகம்
விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணி
தமிழீழம்
[வைகறை, யாழ் பல்கலைக்கழகமருத்துவபீடம்முன்பாக]

விண்ணப்ப முடிவு திகதி: 15-01-1992

(R/2031)

## 396-ம் நாள் நினைவஞ்சலி

| மாமுலை | மாங்குள |
|---|---|
| மலராய் | மாவீரராய் |
| 1975-03-15 | 1990-11-23 |



### செல்வரட்ணம் சுதர்மினா (சுதனா) (சுதா)

சுதா
இளைய நிலவதாய் வந்துதித்த செல்வமே
இன்னல்கள் போக்கிய இனிமைகள் தந்தாய்
புனிதமான ஈழமதை புரிந்து கொண்டு
புரட்சிப்பாதை வழி புனிதப் போர் தொடுத்திட்டாய்
மாதமாறு ஆகுமுன்,
மாவீரர் நாளதனில் மாங்குள படைமுகாமில் ஈழ
மண் வேள்வியில் உன்னுடல் வெந்ததுவோ
மாதம் பன்னிரண்டும் மறைந்தோடி விட்டதம்மா
மங்காத உன் நினைவு எம் மனதை உருக்குதம்மா
மலரும் நாளதனில் எம் மனதோடு வந்திடுவாய்
இனிய தமிழ் வானம் வெளித்தொளிர்ந்திடவே
இளையதோர் நிலவாய் இனியும் நீ வருவாய்
உன்பிரிவால் வாடும்

மாமூலை அப்பா, அம்மா, அண்ணாக்கள்
முள்ளியவளை (R-2029) அக்காச்சி,

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி

வீரஜனனம்
22 – 6 – 1972



## வவுனியாவில் இளைஞன் தடுத்துவைப்பு

(வவுனியா)

வவுனியா நகரப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தின் உளவாளிகளினால் கைது செய்யப்பட்ட தமிழ்ப் பொதுமகன் ஒருவர் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

டேவிட் ரமேஷ் என்ற இளைஞர் சில தினங்களுக்கு முன்னர் வவுனியா நகரை நோக்கிச் சென்ற சமயம் கைது செய்யப்பட்டார்.

இவர் கைது செய்யப்பட்டதற்குரிய காரணமும் தடுத்து வைக்கப்பட்டுள்ள இடமும் உறவினருக்குத் தெரியப்படுத்தப்படவில்லையாம்.

ஆயினும் இவர் தொடர்ந்து விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (தி)

## இடைக்கால ஆணையை அமுல் செய்ய வேண்டுமென திராவிட கழகம் தீர்மானம்

(சென்னை)

காவிரி நதி நீர்ப்பிரச்சினையில் நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையை உடனடியாக அமுல் செய்ய வேண்டுமென்று மதுரையில் நடைபெற்ற திராவிடர் கழகத்தின் பவளவிழா மாநாட்டில் மத்திய அரசிற்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

இக்கழகத்தின் 75 வது ஆண்டு நிறைவைக் குறிக்கும் பவளவிழா நிகழ்ச்சிகள் கடந்த சனிக்கிழமை மதுரையில் ஆரம்பமாகி இரண்டு தினங்கள் நடைபெற்றன. இதன் இறுதி நாளான நேற்று முன் தினம் இக்கழகத்தினால் மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டது.


ஈழநாட்டில் நடந்த வன்முறைகளுக்குத் தப்பி தமிழகம் வந்துள்ள தமிழர்கள் திரும்பிச் சென்று பாதுகாப்புடன் வாழ்ந்திடத்தக்க நடவடிக்கைகளை எடுக்குமாறு மத்திய மாநில அரசாங்கங்களை இம்மாநாட்டில் மற்றொரு தீர்மானம் கேட்டுக் கொண்டுள்ளது.

## ஆசிரியர்கள் கைது

டிக்கோயாவில் இரு தமிழ் தொண்டர் ஆசிரியர்கள் ஹற்றன் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் இருவரும் விடுதலைப் புலிகளுடன் சம்பந்தப்பட்டவர்கள் என்றும் இவர்கள் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு பகுதியைச் சேர்ந்தவர்கள் என்றும் இவர்கள் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## நினைவு கூருகின்றோம்...



1991 - 12 - 24

லெப். காண்டீபன் \ எம் - பி.

1984 ஆம் ஆண்டு இதே தினத்தில் மணலாறு ஒதியமலைப் பகுதியில் பயிற்சிக்கு போராளிகளை அழைத்துச் செல்கையில் சிறிலங்காப் படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய

லெப். காண்டீபன் / எம். பி (சுப்பிரமணியம் சிறிஸ்கந்தராசா குமுழமுனை, மணலாறு)

இதே சம்பவத்தில் வீரச்சாவெய்திய

வெள்ளை

இடிஅமீன் (கணபதிப்பிள்ளை சிவலோகநாதன் - பெண்கள் விவசாயத் திட்டம், முள்ளைத்தீவு வீதி, நெடுங்கேணி, மணலாறு)

ரவி (கனகராசா விக்னேஸ்வரன் - கொக்குத்தொடுவாய், மணலாறு)

அன்சாராஸ் (நமசிவாயம் கனகரத்தினம் - தென்னமரவடி, திருக்கோணமலை)

வியாசனை ஆரம்பப்பிரிவு மண்டபத்தில் நடாத்தவுள்ளது.

இந்த நிகழ்ச்சிகளில் மங்கள இசை, ஆசியுரை, கவியரங்கம், வடடிமண்டபம், நடனம் நாடகம் போன்ற கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன.

## வங்கி ஊழியருக்கு ஆபத்துக் கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

வடக்கு கிழக்கிலுள்ள மக்கள் வங்கி, இலங்கை வங்கி முதலான அரசாங்க வங்கி ஊழியர்களுக்கு வழங்கப்பட்டிருந்த ஆபத்துக் கொடுப்பனவு இம்மாதம் வழங்கப்படுவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுகின்றது.

வேறு ஊழியர்களுக்கு வழங்கப்பட்டிருந்த இந்தக் கொடுப்பனவுகள் வங்கி ஊழியர்களுக்கு வழங்கப்படாதிருந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



வீரஜனனம்

22 - 6 - 1972

வீரமரணம்

24 - 12 - 1988

### வீரவேங்கை கூர்க்காஸ்

[அ. நிக்சன்போல்]

இந்திய இராணுவத்துடனான மோதலில் கண்ணிவெடிக்கு இலக்காகி முல்லைத்தீவில் வீரமரணத்தைத் தழுவிக்கொண்ட வீரவேங்கை கூர்க்காஸை இந்நாளில் வீரமுடன் நினைவு கூருவோம்.

8 ஆம் வாய்க்கால்,
உருத்திரபுரம்

அருட்பிரகாசம் குடும்பத்தினர், சகோதரர்கள்,

(R-1990)


ஸ்ரீதர் திரையரங்கில்

அல்ஜீரிய நாட்டு

# விடுதலைப் போராட்டம்

[தமிழாக்கம் செய்யப்பட்டது]

தினசரி 4.00 மணிக்கும்

சனி, ஞாயிறுகளில் 4, 6 மணிக்கும்

காட்சிகள் காண்பிக்கப்படுகின்றன

(B/3669)


வெள்ளை

இடிஅமீன் (கணபதிப்பிள்ளை சிவலோகநாதன் - பெண்கள் விவசாயத் திட்டம், முள்ளைத்தீவு வீதி, நெடுங்கேணி, மணலாறு)

ரவி (சங்கரராசா விக்னேஸ்வரன் - கொக்குத்தொடுவாய், மணலாறு)

அன்சராஸ் (நமசிவாயம் கலையரசு - தென்னமரவடி, திருக்கோணமலை)

விக்கி (சந்தையா ரவீந்திரன் -5 ஆம் வட்டாரம், கிரிவாய், திருக்கோணமலை)

நிசன் (நல்லதம்பி விஜயேந்திரன் - காட்டுக்குளம், கிரியாய், திருக்கோணமலை)

சந்துரு (பொன்னுத்துரை டென்மொலிகோ - வவுனியா)

1986 ஆம் ஆண்டு மட்டக்களப்பு, தாழங்குடாப் பகுதியில் தேசவிரோதிகள் பதுங்கிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய

லத்திப் (முகம்மது அலியார் முகம்மது லத்தீப் - ஒல்லிக்குளம், காத்தான்குடி மட்டக்களப்பு)

நரேன் (ஏபிரகாம்லிங்கம் விஜயகுமார் 27/1, 3 ஆம் குறுக்குத்தெரு, மலைஷயூர், யாழ்ப்பாணம்)

மட்டக்களப்பு, ஆரையம்பதிப் பகுதியில் சிறிலங்கா படையினருடனான மோதலில் வீரச்சாவெய்திய

சுது சதானந்தன் நிர்மலநாத் - நிர்மலநாத் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்)

1987 ஆம் ஆண்டு காரைநகரில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய

சேரன் (கண்ணன் - கீமலை வீதி, சித்தன்கேணி)

1988 ஆம் ஆண்டு கல்மடுவில் இந்தியப் படையினரின் மிதிவெடியில் சிக்கி வீரச்சாவெய்திய

கூர்க்காஸ் (அருள்பிரகாசம் நிக்சன் போல் 8 ஆம் வாய்க்கால் உருத்திரபுரம், கிளிநொச்சி)

தேசவிரோதிகளினால் கைதுசெய்யப்பட்டு சுட்டுக்கொல்லப்பட்ட எமது ஆதரவாளரான காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை உணவகப் பொறுப்பாளர்

சந்திரகுமார்

1990 ஆம் ஆண்டு குப்பிளானில் வீரச்சாவெய்திய

ஜீவா (மஞ்சுளா சிவநாதம் - 782 வது பண்ணை, செட்டிகுளம், வவுனியா)

கட்டுவனில் சிறிலங்காப் படையினருடனான மோதலின்போது காயமுற்று யாழ். மருத்துவமனையில் வீரச்சாவெய்திய

நளினகாந்தி (கவிதா பழனிநாதன் - கொக்குத்தொடுவாய், மணலாறு)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

(B/3680) விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி

